//அவசரம் // // தனி கவனம் //

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.5045 /ஆ4/2022 நாள்.30.11.2022

பொருள் பள்ளிக்கல்வித்துறை –வேலூர் மாவட்டம்–திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசு –. 2022 – 2023 ஆம் ஆண்டிற்கான திருக்குறள் முற்றோதல் போட்டியில் – 1330 திருக்குறளையும் ஒப்புவிக்கும் மாணவர்களுக்குப் பாராட்டுப் பரிசு தலா ரூ.10,000/– வீதம் பரிசுத்தொகை – பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த போட்டிகள் –நடத்துதல் –சார்பு

பார்வை மாவட்ட ஆட்சியரின் கடித ந.க.எண்.400/2022 நாள். 21.11.2022

==========

பார்வையில் காணும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதத்திற்கிணங்க ,இலக்கியங்கள் அனைத்திலும் சிறந்ததும் உன்னதமானதும் மனித குலம் அனைத்திற்குமாக உதித்த மேலானதும் ஆகிய தன்னிகரற்ற படைப்பு திருக்குறள். அத்தகைய சிறப்புமிக்க அறக்கருத்துக்களடங்கிய திருக்குறட்பாக்களை மாணவர்கள் இளம் வயதிலேயே மனப்பாடம் செய்தால் அவை பசுமரத்தாணிபோல் பதிந்து, நெஞ்சில் நிலைத்து அவர்களது வாழ்க்கைக்கு வழிகாட்டும். தாம் பெறுகின்ற கல்வியறிவோடு, நல்லொழுக்கம் மிக்கவர்களாக மாணவர்கள் உருவாக வழிவகுக்கும். எனவே, திருக்குறள் முற்றோதல் செய்யும் மாணவச் செல்வங்களுக்கு பரிசு வழங்கிப் பாராட்டுவது, மாணவர்களின் நல்வாழ்வுக்குத் துணை நிற்பதாகவும், திருக்குறள் நெறி வழிவகுப்பதாகவும் அமையும். அதனைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் 1330 திருக்குறளையும் ஒப்புவிக்கும் மாணவர்களுக்குப் பாராட்டுப் பரிசு தலா ரூ.10,000/– வீதம் பரிசுத்தொகை, பாராட்டுச் சான்றிதழ் வழங்கி ஆண்டுதோறும் சிறப்பிக்கப்பெறுகின்றனர்.

திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசுக்கு கலந்து கொள்ளும் மாணவர்கள், திறனறி குழுவினரால் திறனாய்வு செய்து தகுதிபெற்றவர்கள் தெரிவுசெய்யப்பெற்று, பரிசு பெறுவதற்கு அரசுக்குப் பரிந்துரை செய்யப்பெறுகிறார்கள். 2022 – 2023 ஆம் ஆண்டிற்கான திருக்குறள் முற்றோதல் போட்டியில் பங்கேற்க விரும்பும் மாணவ , மாணவியர்கள் தமிழ் வளர்ச்சித் துறையின் https;//tamilvalarchithurai.tn.gov.in என்ற வலைதள முகவரியில் விண்ணப்பங்களைப் பதிவிறக்கம் செய்து நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்களை வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக "அ" பிரிவு கட்டிடம் நான்காம் தளத்தில் அமைந்துள்ள தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அலுவலகத்திலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ அளிக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 0416 – 2256166 என்ற தொலைபேசி எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ,மாணவியர்களுக்கு திருக்குறள் முற்றோதல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த அனைத்து அரசு தொடக்க, நடுநிலை, உயர்,மற்றும் மேல்நிலைப்பள்ளி /அரசு உதவி பெறும் /தனியார் பள்ளிகளுக்கு 1330

திருக்குறளையும் ஒப்புவிக்கும் தகுதிபெற்ற மாணவர்களை விண்ணபிக்க சுற்றறிக்கை அனுப்பி விழிப்புணர்வு ஏற்படுத்துமாறு மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை /தொடக்கக்கல்வி /தனியார் ) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**<u>திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசு பெறுவதற்கான விதிமுறைகள்</u>**

- 1330 திருக்குறட்பாக்களையும் முழுமையாக ஒப்புவிக்கும் திறன் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
- இயல் எண், பெயர், அதிகாரம் எண், பெயர், குறள் எண், பெயர் போன்றவற்றை தெரிவித்தால் அதற்குரிய திருக்குறளைக் கூறும் திறன் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
- திருக்குறளின் அடைமொழிகள், திருவள்ளுவரின் சிறப்புப்பெயர்கள், திருக்குறளின் சிறப்புகள் ஆகியவற்றை அறிந்தவராக இருத்தல் வேண்டும்.
- வேலூர் வருவாய் மாவட்டத்தில் அமைந்துள்ள பள்ளியில் பயில்பவராக இருத்தல் வேண்டும். அரசு / அரசு உதவிபெறும் / தனியார் / பதின்மப் பள்ளிகள் போன்ற பள்ளிகளில் 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பங்கு பெறலாம்.
- தமிழ் வளர்ச்சித் துறையால் வழங்கப்பெறும் இப்பரிசினை இதற்குமுன்னர் பெற்றவராக இருத்தல் கூடாது.
- திருக்குறளின் பொருளும் அறிந்திருப்பின் கூடுதல் தகுதியாகக் கருதப்பெறும்.

இணைப்பு :

1. பார்வை கடித நகல்
2. விண்ணப்ப படிவம்
3. படிப்புச் சான்று படிவம்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,

மாவட்டக் கல்வி அலுவலர்கள்
(இடைநிலை/ தனியார்/ தொடக்கப்பள்ளி ) தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பலாகிறது.

நகல்:
வேலூர்,மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பலாகிறது.